ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதிவிசேஷமானது

අංක 2115/5 - 2019 මාර්තු මස 18 වැනි සඳුදා - 2019.03.18

*2115/5 ஆம் இலக்கம் - 2019 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 18 ஆந் திகதி திங்கட்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

*ச.வ.பி. 21/ 78* (xv)

***1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டம்***

*27(1) ஆம் பிரிவின் கீழான கட்டளை*

*1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 27(1) ஆம் பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பயனைக் கொண்டு, நகரத் திட்டமிடல், நீர் வழங்கல் மற்றும் உயர் கல்வி அமைச்சர் ஏ. இபதுல் றவுப் ஹகீம் ஆகிய நான், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் விதப்புரையின் மீது, மேற்சொல்லப்பட்ட சட்டத்தின் 139 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் பயனைக்கொண்டு, சொல்லப்பட்ட சட்டத்தின் 21 ஆம் பிரிவின்கீழ் தாபிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றாகக் கருதப்படுகின்ற இலங்கை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் பீடங்களையும் துறைகளையும் குறித்துரைக்கின்றதான, (2017 ஆம் ஆண்டு யூன் மாதம் 14 ஆந் திகதிய 2023/ 32 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட கட்டளை மூலம் கடைசியாகத் திருத்தப்பட்டவாறான) 2007 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 09 ஆந் திகதிய 1518/ 15 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட கட்டளைக்கான அட்டவணையை இக்கட்டளையின் மூலம் பின்வருமாறு திருத்துகின்றேன்.*

1A - PG 4433— 518 (2019/03)

*இவ் அதிவிசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

(1) அதன் நிரல் I இல் காணப்படுகின்ற “கலைப்பீடம்” என்னும் விடயத்திற்கும் அதன் நிரல் II இலுள்ள நேரொத்த பதிவுகளுக்கும் பதிலாகப் பின்வருவதனை இடுவதன் மூலமும் :-

| “நிரல் I | | நிரல் II |
|---|---|---|
| கலைப்பீடம் | 1. | பொருளியல் துறை |
| | 2. | புவியியல் துறை |
| | 3. | மெய்யியல் துறை |
| | 4. | பல்மொழிகள் மற்றும் ஆங்கிலத் துறை |
| | 5. | கிறிஸ்தவ மற்றும் இஸ்லாமிய நாகரிகத் துறை |
| | 6. | தமிழ்த் துறை |
| | 7. | சரித்திரத் துறை |
| | 8. | கல்வித் துறை |
| | 9. | நுண்கலைத் துறை |
| | 10. | அரசியல் விஞ்ஞானத் துறை |
| | 11. | சமூகவியல் துறை |
| | 12. | நடனவியல் துறை (ரா. நு. அ.)* |
| | 13. | இசைத் துறை (ரா. நு. அ.)* |
| | 14. | சட்டத்துறை |
| | | *ராமநாதன் நுண்கலை அக்கடமி ;”; |

(2) அதன் நிரல் I இலும் நிரல் II இலுள்ள நேரொத்த பதிவுகளிலும் காணப்படுகின்ற “தொழில்நுட்பவியல் பீடம்” என்னும் பதிவை உடனடுத்துப் பின்வருவதனைச் சேர்ப்பதன் மூலமும் :-

| “நிரல் I | | நிரல் II |
|---|---|---|
| இந்துக் கற்கைகள் பீடம் | 1. | இந்து நாகரிகத் துறை |
| | 2. | சைவ சித்தாந்தத் துறை |
| | 3. | சமஸ்கிருதத் துறை ;”; |

ஏ. இபதுல் றவூப் ஹக்கீம்,
நகரத் திட்டமிடல், நீர் வழங்கல் மற்றும்
உயர் கல்வி அமைச்சர்.

கொழும்பு,
2019, மாச்சு 11.

04-04

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.